Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT,
BODINAYAKANUR

08.06.2023

**C.C No.242/2022**

Depositions of- நாச்சியாரம்மாள்..witness for ...Prosecution Side Witness 3 (LW-3 )

| | | |
|---|---|---|
| Name | - | நாச்சியாரம்மாள் (PW- 3) |
| Father's and Husband's name | - | வீரையா |
| Village | - | |
| Taluk | - | |
| Caste | - | |
| Calling | - | |
| Religion | - | |
| Age | - | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18.10.2023.

**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**(எதிரி ஆஜர். )**

**முதல் விசாரணை-**

நான் வினோபாஜி காலனியில் குடியிருந்து, கூலி வேலை செய்து வருகிறேன். எதிரியை தெரியும். அசா.1 பெரிய மகள், அசா.2 சிறிய மகள். ஆஜரி எதிரி, வீரலட்சுமியின் கணவர். திருமண ஆன நாளிலிருந்து எதிரி என் மகளுடன் ஏதாவது காரணம் சொல்லி என் மகளுடன் சண்டை போட்டுக்கொண்டிருந்தார். என் மகள், எதிரியின் கொடுமைகள் தாங்காமல் எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டார். கடந்த 23.02.ம் தேதி சுமார் 3 வருடத்திற்கு முன்பு நான் , எனது பெரிய மகள், எனது சின்ன மகள், பேரன் தர்ஷனபிரசாத் ஆகியோர்கள் வேலைக்கு சென்றுவிட்டு 6.00 மணிக்கு சுப்புராஜ்

பங்களாவிற்கு அருகில் பார்க்கிற்குள் வேலை செய்து விட்டு நடந்து வந்து கொண்டிருந்தோம். அப்போது எதிரி மது அருந்திவிட்டு வந்து எனது மகளுடன் பிரச்சனை செய்து கொண்டிருந்தார். அப்போது எதிரி, என்னடி தேவிடியா மகளே என்று சொல்லி கார் கம்பியை எடுத்துக்கொண்டு வந்து எனது சின்ன மகளை இடது தோள்பட்டையில் அடித்து விட்டார். எனது பெரிய மகள் தடுத்ததற்கு அதே கம்பியை எடுத்து எனது பெரிய மகளின் தலையில் அடித்து விட்டார். பின்னர் எனது பெரிய மகளுக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டதால் போடி அரசு மருத்துவமனைக்கு சென்றோம். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.

Taken down before me in Open Court,
and read over to the witness and
admitted by the deponent to be correct.

G K VELUMAYIL
Digitally signed by G K VELUMAYIL
Date: 2023.10.18 13:44:56 +0530

Judicial Magistrate,
Bodinayakanur.